விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 077 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 22 திங்கட்கிழமை (06.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## அமெரிக்காவின் புலனாய்வுத் தகவலே புலிகளைத் தோற்கடிக்க உதவியது

### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் 9 ஆயுதக் கப்பல்களை இலங்கை கடற்படை அழித்தது.

இது எங்களது புலனாய்வுப் பிரிவினர் அமெரிக்க புலனாய்வு பிரிவினருடன் ஒத்துழைத்ததன் காரணமாகவே சாத்தியமானது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் அமெரிக்காவின் உயர்மட்ட குழுவினர்

11

## மார்ச் 19க்கு முன்னர் தேர்தலை நடத்துங்கள்

### எதிர்க்கட்சிகள் கூட்டாக கோரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மார்ச் 19ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நடத்துமாறு கோரி அனைத்து பிரதான எதிர்க்கட்சிகளும் கூட்டாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கடிதம் எழுதியுள்ளன.

இக்கோரிக்கையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள்

11

### முதல்வர் வேட்பாளராக

## தமிழரசுக் கட்சி சார்பில் சொலமன் சிறில் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் முதல்வர் வேட்பாளராக சொலமன் சிறிலை நியமிக்க திட்டமிட்டிருப்பதாக தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

நேற்று தமிழ் அரசுக் கட்சியின்

11

# சடுதியாக அதிகரித்தது ரூபாயின் பெறுமதி

- தங்கத்தின் விலை சரிவு
- பொருட்களின் விலை குறைவடையும் வாய்ப்பு

(கொழும்பு)

**இலங்கை ரூபாயின் பெறுமதி சடுதியாக அதிகரித்துள்ளதன் காரணமாக நாட்டின் பொருளாதாரத்தில் சாதகமான மாற்றங்கள் அதிரடியாக ஏற்படவுள்ளன.**

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக இலங்கையின் பொருளாதாரம் கடும் வீழ்ச்சியைக் கண்டிருந்தது.

இதன் காரணமாக இலங்கை ரூபாயில் டொலரின் பெறுமதி கணிசமாக உயர்வடைந்தது.

இதனால் இறக்குமதிப் பொருட்கள் கண்டபாட்டில் உயர்வடைய, அனைத்துப் பொருட்கள் சேவைகளின் விலைகளும் பன்மடங்கு அதிகரித்தன.

இந்நிலையில் தற்போது இலங்கை ரூபாயின் பெறுமதி சடுதியாக உயர்வடைந்துள்ளது.

இதனால் தங்கத்தின் விலை ஒரு பவுணுக்கு 15 ஆயிரம் ரூபாய் அளவில்

11

### யாழ்.பாசையூர் பகுதியில்

## விபரீத முடிவெடுத்து இளைஞன் உயிர்மாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பாசையூர் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞன் ஒருவர் நேற்றைய தினம் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

குறித்த இளைஞன் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அல்லைப்பிட்டி பகுதிக்குச் சென்று அங்குள்ள மரம் ஒன்றில் கயிற்றினை கட்டி அதில்

11

## பாரிய போராட்டத்தில் குதிக்கவுள்ள வட மாகாண மீனவ சங்கங்கள்


### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்



6ஆம் பக்கம் பார்க்க

## மீனவ குடும்பங்களுக்கான தீர்வைப் பெற போராடுவோம்

### சிறீதரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலையே நம்பி வாழ்கின்ற 50 ஆயிரம் குடும்பங்களுக்கு நியாயமான தீர்வினை பெற்று கொடுப்பதற்கு உழைப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

11

## இளைஞர் ஒருவர் மீது துரத்தி துரத்தி வாள்வெட்டு

### அச்சுவேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலி - மகிழடி வைரவர் கோவில் பகுதியில் நேற்று மாலை இளைஞர் ஒருவர் மீது வாள்வெட்டுக் குழு ஒன்று துரத்தி துரத்தி வாள் வெட்டு நடத்தியுள்ளது.

இரு குழுக்களுக்கிடையில் தொடர்ச்சியாக முறுகல் நிலை இருந்துவருவதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

இந் நிலையில் ஒரு குழுவைச்சேர்ந்த

11

## மின்சாரம் தாக்கி மாணவன் உயிரிழப்பு

### ஆட்டுக்கு குழை வெட்ட சென்றபோது துயரம்

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் மேற்கில் ஆட்டுக்கு குழை வெட்ட சென்ற போது மின்சாரம் தாக்கி மாணவனொருவன் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் சித்தியம்பளியடி தெல்லிப்

02

## 150 போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோண்டாவில் பகுதியில், 150 போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.


கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கட்டடம் பாதுகாப்பற்றதால் மந்திரிமனைக்குள் நுழையத் தடை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் மந்திரி மனையினுள் எவரும் எக்காரணம் கொண்டும் உள்நுழைய வேண்டாம் என தொல்லியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கட்டடம் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளமையினால் வீண் அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் பொருட்டும் பராமரிப்புப் பணிகளினை மேற்கொள்ளும் பொருட்டும் இவ் அறிவுறுத்தல் வெளியிடப்பட்டுள்ளதாக அத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (4,7,33)

## எஸ்.எல்.எஸ் தர குறியீடுள்ள ரின் மீன்களை கொள்வனவு செய்யுங்கள்

### பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ரின் மீன்களை கொள்வனவு செய்யும் போது எஸ்.எல்.எஸ் (SLS) என்ற இலங்கை தரநிறுவனத்தின் தரச்சான்று உள்ளவற்றை மாத்திரமே பொதுமக்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் என நுகர்வோர் அதிகாரசபை அறிவுறுத்தியுள்ளது.

நேற்றையதினம் விடுத்துள்ள இந்த அறிவிப்பில், தரமற்ற உற்பத்திகள் தொடர்பில் முறைப்பாடு அளிக்கமுடியும் எனவும் இலங்கை நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

சந்தையில் உள்ள தரமற்ற ரின் மீன் உற்பத்தி தொடர்பில் அண்மையில் ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இதன் பின்னர் சந்தையில் உள்ள தரமற்ற ரின்மீன்கள் தொடர்பில் நுகர்வோருக்குத் தெளிவுபடுத்துவதற்காக இலங்கை நுகர்வோர் அதிகாரசபை ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த ஊடக சந்திப்பில் வைத்தே அதன் தலைவர் அசங்க ரணசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் தரமற்ற ரின் மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றமை தெரியவந்துள்ளது. (4,7)

## பாடசாலை ஓட்டப் பந்தயத்தில் முதலிடம் பிடித்த மூதாட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபல பாடசாலைகளில் ஒன்றான விக்ரோரியா கல்லூரியில் கடந்த 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று இல்ல மெய்வல்லுனர் போட்டி இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் திருமதி. எஸ். சிவகுமார் தலைமையில் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டியில் மாணவர்களின் பல்வேறு போட்டி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

குறித்த விளையாட்டு போட்டியில் பழைய மாணவர்களிற்கான ஓட்டப்பந்தய நிகழ்வு இடம்பெற்றது.

அந்த ஓட்டப்பந்தய நிகழ்வில் அப்பாடசாலையின் பழைய மாணவிகள் பலர் பங்குபற்றி இருந்தார்கள்.

அந்த பழைய மாணவர் ஓட்டப்பந்தயத்தில் குறித்த பாடசாலையில் படித்த 75 வயதுடைய புனிதவதி என்ற மூதாட்டி ஒருவர் ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொண்டு அதற்கான முதல் பரிசினை தட்டிசென்றுள்ளார்.

இவ்வாறாக இளம் பழைய மாணவிகளுடன் போட்டி போட்டு ஓடி தனது திறமையினையும், சாதனை படைக்க வயது எந்த தடையும் இல்லை என்பதனையும் நிரூபித்து காட்டிய மூதாட்டி புனிதவதிக்கு பலரும் தமது பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர். (4,7,104)

## சீனிப்பாணியை தேன் என கூறி விற்பனை செய்த நபர் கைது

(வவுனியா)

வவுனியாவில் சீனிப்பாணியை காய்ச்சி, அதனை தேன் என்று கூறி விற்பனை செய்த நபரை சுகாதார பிரிவினர் சுற்றிவளைத்துப் பிடித்ததோடு, அவரிடமிருந்து 41 லீற்றர் சீனிப்பாணியை கைப்பற்றியுள்ளனர்.

தேன் என சீனிப்பாணியை நபரொருவர் விற்பனை செய்வதாக வவுனியா சுகாதார பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், பொது சுகாதார பரிசோதகர்கள் காத்தான் கோட்டம் பகுதியிலுள்ள வீடொன்றை சுற்றிவளைத்துள்ளனர்.

இதன்போது அந்த வீட்டில் விற்பனைக்கு தயாரான நிலையில் மொத்தமாக 41 லீற்றர் சீனிப்பாணி நிரப்பப்பட்ட 55 போத்தல்களையும், சீனிப்பாணி காய்ச்ச பயன்படுத்தப்பட்ட பொருட்களையும் சுகாதார பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இதனையடுத்தே சீனிப்பாணி விற்பனை செய்த நபரை நெளுக்குளம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கைதான நபரோடு கைப்பற்றப்பட்ட சீனிப்பாணி போத்தல்கள் மற்றும் ஏனைய பொருட்களும் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, எதிர்வரும் 10ஆம் திகதி வரை சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (4,7)

## பால் புரைக்கேறியதில் 14 மாத குழந்தை பலி

### உடுவிலில் சோகம்

(யாழ்ப்பாணம்)

பால் புரைக்கேறியதில் 14 மாதங்களான குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

குறித்த சம்பவம் நேற்று உடுவில் மல்வம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (4,7)


## 31ஆம் நாள் அந்தியேட்டி
## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 15 . 07 . 1948



மறைவு 05 . 02 . 2023

கடந்த 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் சோமசுந்தரம் நாகம்மா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 05.03.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் புங்குடுதீவு கண்ணகைபுரம் தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (07.03.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

மகன் : சோ.கேதீஸ்வரன் (ஈகிள் ஹாட்வெயார் - யாழ்ப்பாணம்)
மகன் : சோ.ஜெகதீஸ்வரன் (சிற்றி ரான்ஸ்போட் - கொழும்பு)
மகன் : சோ.பிரகதீஸ்வரன் (சிற்றி ஹட்வெயார் & ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்)
இல.87/5, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 021 222 8678

(C-6101)



### சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்

கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலா விசாவும் மற்றும் சகல நாடுகளுக்குமான **Student Visa** வும் தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**Hybrid International Hub (pvt) LTD**
**076 250 0098 / 021 222 1265**

(C-6108)



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 90 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 km
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 m தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14808)

**074 318 7263**
**076 755 8606**
**076 436 5814**


### மின்...

பளை கிழக்கை சேர்ந்த மகாஜனா கல்லூரியில் கல்வி பயிலும் ஸ்ரீ மதுசன் என்ற 17 வயது மாணவனொருவனே இவ்வாறு உயிரிழந்தவராவர்.

குறித்த மாணவன் மரத்தில் ஏறி ஆட்டுக்கு குழை வெட்டிக்கொண்டிருந்த போது மின் இணைப்பினூடாக மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பிலான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணய நிதியத்தின் உதவி அபிவிருத்திக்கு போதாது

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

**சர்வதேச நாணய நிதியத்தின் பிணையெடுப்பு இலங்கைக்கு தற்போது அவசியமானதாக இருந்தாலும் உண்மையில் அது தேசத்தின் வளர்ச்சிக்கு போதுமானதாக இருக்காது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**



டுவிட்டர் பதிவொன்றினுடாகவே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் தற்போதைய சவாலானது வளர்ச்சியை உருவாக்குவதாகும்.

இந்நிலையில் தேவைகள் மோசமடைந்து வரும் நிலையில், இழக்கப்படும் தொழில்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

எனவே தேவையான வளர்ச்சியை உருவாக்க, உள்நாட்டில் இயங்கும் வர்த்தகம் அல்லாத வளர்ச்சி இனி போதுமானதாக இருக்காது.

இதற்காக சுவர்களை தகர்த்து உலகிற்கு பாலங்கள் கட்ட வேண்டும்.

இந்தநிலையில் சீர்திருத்தங்கள் இல்லாமல் உள்நாட்டு தீர்வு உள்ளது என்று மேடைகளில் கூறுவது சாத்தியமற்ற அம்சமாகும் என்றும் ஹர்ச குறிப்பிட்டுள்ளார். (4)

# எரிவாயு விலையில் மாற்றமில்லை

## லிட்ரோ அறிவிப்பு

(கொழும்பு)

லிட்ரோ எரிவாயு சிலிண்டர் விலையில் எந்தவித மாற்றமும் ஏற்படுத்தப்படாது என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

விலை சூத்திரத்தின் படி, எரிவாயு விலை ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் திகதி மாற்றியமைக்கப்படுகிறது.

விலைச் சூத்திரத்தின் பிரகாரம் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட வேண்டியிருந்தாலும் டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை கருத்தில் கொண்டு விலையை மீளாய்வு செய்யப் போவதில்லை என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கமைய இம்மாதம் அதே விலையில் எரிவாயு விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# அரச அதிகாரிகள் சிலருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு

(கொழும்பு)

நிதி அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் மற்றும் அரச அச்சகர் உள்ளிட்ட அதிகாரிகளை மீண்டும் அழைப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை அவர்களை அழைக்க எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கமைய, நிதி அமைச்சு உள்ளிட்ட குறித்த நிறுவனங்களுடன் தொடர்ந்தும் கலந்துரையாடி, உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான திகதி குறித்து எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னர் அறிவிப்பதாகவும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை முடக்கி வைப்பதை தவிர்க்குமாறு நிதி அமைச்சின் செயலாளர், நிதி அமைச்சர் ஆகியோருக்கு உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவை பிறப்பித்தது. (நி)

# நெருக்கடிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து புத்தளத்தில் தீப்பந்தப் போராட்டம்



(புத்தளம்)

மின்சார கட்டண அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் பல கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் சனிக் கிழமை புத்தளம், பாலாவி சந்தியில் தீப்பந்தப் போராட்டம் இடம்பெற்றது. இந்த போராட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினர் ஏற்பாடு செய்திருந்தனர். (நி)

# தேர்தலுக்கான கட்டுப்பணம் அரசாங்க கணக்கில் வைப்பு

## தேர்தல்கள் ஆணைக்குழு தகவல்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக 80 ஆயிரத்து 720 வேட்பாளர்களின் கட்டுப் பணமாக பெறப்பட்ட 18 கோடியே 60 இலட்சம் ரூபாய் அரசாங்கக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுளது.

இது குறித்து கருத்து தெரிவித்த தேர்தல் ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர், திறைசேரியில் பணம் இல்லாத காரணத்தினால் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. எனினும் கையளிக்கப்பட்டுள்ள வேட்புமனுக்களை இரத்து செய்யாவிட்டால், சம்பந்தப்பட்ட வேட்பாளர்களுக்கு பிணைப் பணத்தை செலுத்த முடியாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் நிலவி வரும் நிச்சயமற்ற தன்மைக்கு தீர்வு காணும் வரை பிணைத் தொகையை அரசாங்கத்தின் கணக்கில் வைக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை 58 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 329 சுயேட்சைக் குழுக்களுக்காக 80,720 வேட்பாளர்கள் வைப்பு செய்துள்ளனர். (நி)

# மின்சார சபையில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையை சுமார் 40% குறைப்பது தொடர்பில் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு தொடர்பான சட்டமூலம் பாராளுமன்றத்தில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, 40% ஆட்குறைப்பு தொடர்பில் அமைச்சரவை பத்திரமும் அடுத்த மாதம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் சம்பளமற்ற விடுமுறையில் போட்டியிடும் அரச ஊழியர்கள், தேர்தல் தாமதம் காரணமாக மூன்று மாதங்களுக்கு பணிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு நடைபெறவுள்.ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு சம்பளமில்லாத விடுமுறையில் சுமார் 7100 இற்கும் அதிகமான அரச ஊழியர்கள் வேட்புமனு தாக்கல் செய்துள்ள பின்னணியில் அரச ஊழியர்கள் தொடர்பில் உடனடியாக தீர்மானத்தை எடுக்குமாறு எதிர்க்கட்சி மற்றும் ஆளும் கட்சிகளின் உறுப்பினர்கள் அரச சேவைகள் அமைச்சரும் பிரதமருமான தினேஷ் குணவர்தனவிடம் வலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான தெரிவு மேலும் தாமதமாகலாம்

(கொழும்பு)

தேசிய தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்களை நியமிப்பது மேலும் தாமதமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுயாதீன ஆணைக்குழுவில் அங்கத்துவம் பெறுவதற்கான தகுதியுடைய உறுப்பினர்களின் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வது பெப்ரவரி 15 ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களை கடந்த மாதம் அரசியலமைப்புச் சபை கோரியது.

அரசியலமைப்பின் 41 பிரிவின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் கீழ் நியமனங்கள் செய்யப்படவுள்ளன.

அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டமை, தகுதியற்ற நபர்களால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட நபர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட ஆணைக்குழுக்களில் உறுப்பினர்களாவதற்கு விண்ணப்பித்திருப்பதனால் தெரிவுச் செயற்பாடுகள் சிக்கலானதாக உள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி)

# சிறுவர்களிடையே அதிகரிக்கும் வைரஸ் நோய்

## சிறுவர் மருத்துவமனைப் பணிப்பாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் தற்போது சிறுவர்களிடையே வைரஸ் நோய் நிலைமை அதிகரித்து வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ரிஜ்வே சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஜீ.விஜேசூரிய இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

தொண்டை வலி, காய்ச்சல் மற்றும் இருமல் என்பன இதற்கான நோய் அறிகுறிகள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்.நகரின் துடுப்பாட்ட வரலாற்றில் புதிய திருப்பம்

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு II இற்கு சென்றலைட்ஸ், விக்ரோறியன்ஸ் அணிகள் தெரிவு

2022 ஆம் ஆண்டு சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு II இற்கான தொடரில் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட சென்றலைட்ஸ், விக்ரோறியன்ஸ் அணிகள், பிரிவு II இற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ். நகரில் பிரிவு II இற்கான தொடரின் முதலாவது போட்டி இன்று சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு சென்றலைட்ஸ் அணிக்கும் விக்ரோறியன்ஸ் அணிக்கும் இடையில் நடைபெற உள்ளது. (க)





# துபாய் ஓபன் டென்னிஸ்

## சம்பியன் பட்டம் வென்றார் மெத்வதேவ்

துபாய் ஓபன் சர்வ தேச ஆண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.


இதில் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ரஷ்ய வீரர் டேனில் மெத்வதேவ், சக நாட்டு வீரர் ஆந்த்ரே ரூப்லெவுடன் மோதினார்.

இதில் மெத்வதேவ் 6-2, 6-2 என்ற நேர் செட்க ளில் ரூப்லெவை வீழ்த்தி, சம்பியன் பட்டம் வென்று அசத்தினார்.

ஏற்கனவே, மெத்வதேவ் நம்பர் ஒன் வீரரான ஜோகோவிச்சை அரையிறுதியில் வீழ்த்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. மெத்வதேவ் இந்த ஆண்டில் ரோட்டர்டாம், தோஹா மற்றும் துபாய் என தொடர்ச்சியாக 3 தொடர்களில் சம்பியன் பட்டம் வென்று அசத்தியுள்ளார். (நி)




நியாசன்




நியாஷ்




சனாதனன்




மயூரி




கோபினா




கஸ்தூரி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் போட்டியிடும் அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க முடியாத நிலை-புஞ்சிஹேவா

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட அரச ஊழியர்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நிவாரணம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்ட விதிகளுக்கு அமைவாக, தேர்தலில் வேட்பாளராக போட்டியிடுவதற்காக அரச பணியாளர்கள் சம்பளமில்லாத விடுப்பு எடுத்துள்ளனர்.

எதிர்வரும் 9 ஆம் திகதி திட்டமிட்டபடி தேர்தலை நடத்த முடியாது என்பதால், குறித்த வேட்பாளர்களில் பலர் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

தேர்தல் செயல்முறை தொடர்வதன் காரணமாக அவர்கள் மீண்டும் தொழிலுக்கு திரும்புவது தடைசெய்யப்பட்டுள்ள போதும், இந்த வேட்பாளர்களுக்கு நிவாரணம் வழங்க முடியாது என நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார். (நி)



# பாராளுமன்ற உணவகத்தில் பால், முட்டைக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் உணவறையில் பால் மற்றும் முட்டைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாராளுமன்றத்துக்கு உணவு விநியோகிக்கும் தரப்பினருக்கான கொடுப்பனவு வழங்கப்படாமையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.


இதேவேளை மின்சாரம், எரிவாயு மற்றும் உணவுப் பொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளமையினால், பாராளுமன்றத்தில் உணவுக்கான செலவு 30 வீதத்தால் அதிகரித்துள்ளது.

பாராளுமன்றத்தில் உணவுக்காக மாதாந்தம் சுமார் 90 இலட்சம் செலவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அது தற்போது ஒரு கோடியைத் தாண்டியுள்ளதாகவும் பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி)

# எந்தத் தேர்தல் நடந்தாலும் பெரமுனவே வெல்லும்

## மார்தட்டுகிறார் பசில்



(கொழும்பு)

நாட்டில் எந்தத் தேர்தல் முதலில் நடக்கும் என்பதனை தங்களால் ஊகிக்க முடியவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எந்தத் தேர்தல் நடந்தாலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே வெற்றியடையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எந்தத் தேர்தலிலும் தோற்ற வரலாறு மொட்டுக் கட்சிக்கு இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் தொடர்ந்து பிற்போட முடியாது எனவும், மக்களின் ஜனநாயக உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வருடமும் அடுத்த வருடமும் தேர்தல்களுக்கான வருடங்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஊடாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியது போல் பாராளுமன்றத் தேர்தல் மூலம் மாத்திரம்தான் அரசாங்கத்தினை மாற்ற முடியும் எனவும் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (நி)

# உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானம் இலங்கையில் தரையிறங்கியது

(கொழும்பு)

உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானமான Airbus A380-800 நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

விமானத்திற்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே குறித்த விமானம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது.

நியூசிலாந்தின் ஒக்லாந்தில் இருந்து துபாய் நோக்கி பயணித்த போது, எரிபொருள் நிரப்புவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை இந்த விமானம் வந்தடைந்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து குறித்த விமானத்திற்கு 62 ஆயிரத்து 800 லீற்றர் எரிபொருள் நிரப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த எரிபொருள் கையிருப்பின்பெறுமதி சுமார்ஒரு கோடியே அறுபத்து எட்டு இலட்சம் ரூபாய் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

ஒரு மணி நேரம் 40 நிமிடங்களுக்குப் பிறகு விமானம் மீண்டும் துபாய்க்கு புறப்பட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த 3 ஆவது சந்தர்ப்பம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# பாராளுமன்றை ஜனாதிபதி கலைக்க வேண்டும்

(கொழும்பு)

அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்க வேண்டும் என கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

பெலியத்த பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். (நி)

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கான மாத்திரைகளுக்கு தட்டுப்பாடில்லை

## தேவிகா கொடித்துவக்கு தெரிவிப்பு

(கொழும்பு)

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் கல்சியம் மற்றும் இரும்புச் சத்து மாத்திரைகளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை என அரச குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவி தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கும் போது இந்த விடயத்தை தெரிவித்தார்.

இரண்டு மாதங்களுக்குத் தேவையான அளவில் கல்சியம் மற்றும் இரும்புச் சத்து மாத்திரைகள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இராசிபலன்

06.03.2023
மாசி 22, திங்கட்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 5.28 மணிவரை

மகம் பின்னிரவு - 1.05 மணிவரை
சுபநேரம் -12.25-1.55 மணிவரை
இராகுகாலம்-7.55-9.25 மணிவரை

சந்திராஷ்டமம் - உத்தரம், திருவோணம்
நடேசர் அபிசேகம், மாசி மகம்

வளவன்

**மேஷம்:** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், வழிபாடு முன்னேற்றம் தரும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கடகம்:** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்:** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன் வரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்:** சிலர் பாராட்டவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**ரிஷபம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம்,உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** விருப்பங்கள் நிறைவேற சிவனை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** பணத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்:** இனிய அனுபவங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கன்னி:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், பொதுக் காரியங்களில் ஆர்வம் கூடும், சுபவிரயங்களில் தாராளம் காட்டுவீர்கள்.

**தனுசு:** உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், தன்னம்பிக்கையோடு பணியாற்றி முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும்.

**மீனம்:** உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்காகச் செய்ய முற்படுவீர்கள், உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையை செய்ய நேரம் எடுத்துக்கொள் அது வெற்றியின் விலை.

# இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதித்ததற்கு எதிராக விரைவில் பாரிய போராட்டம்

## வடக்கு மாகாண மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதித்தமைக்கு எதிராகப் பாரிய போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக வடக்கு மாகாண மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டாக அறிவித்துள்ளனர்.**



வடக்கு மாகாண மீனவர் சார் பிரச்சினைகள் குறித்து வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகளுடனான கலந்துரையாடல் நிகழ்வின் போதே வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் அகிலன் கதிர்காமர் தலைமையில், யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் கலந்துரையாடினர்.

மேலும் இந்திய மீனவர்களை இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிப்பதற்கு எதிராகப் பாரிய போராட்டம் ஒன்றை நடத்தி ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை கையளிப்பதற்கும் தீர்மானித்தனர். மீனவ சங்கங்களுடன் கலந்துரையாடிய பின்னர் போராட்டம் நடைபெறவுள்ள திகதி விரைவில் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன் போது தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன், ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்தன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி)

# கட்டாக்காலிகளால் அழிவடையும் சிறுதானியச் செய்கை தென்மராட்சி விவசாயிகள் முறைப்பாடு தெரிவிப்பு

(சாவகச்சேரி)

கைதடி கமநலசேவை நிலைய எல்லைப்பரப்பிற்குட்பட்ட தனங்கிளப்பு, கைதடி மற்றும் நாவற்குழி பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தால் சிறுதானியச் செய்கை மற்றும் நெற் பயிர்ச்செய்கைகள் அழிவடைந்து வருவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

தனங்கிளப்பு, கைதடி மற்றும் நாவற்குழிப் பகுதிகளில் நெல் அறுவடை முழுமையாக நிறைவடையாத நிலையில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

குறித்த கட்டாக்காலி மாடுகள் நெல் வயலை சேதப்படுத்துவதுடன் நெல் அறுவடையின் பின்னரான சிறுதானிய செய்கைக்கும் சேதம் ஏற்படுத்தி வருகின்றன.

சிறுதானிய செய்கைகள் முட்கம்பியால் அடைக்கப்பட்ட அடைப்பிற்குள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் சில இடங்களில் முட்கம்பிகள் அவிழ்க்கப்பட்ட நிலையில் காணப்படுவதால் மாடுகள் ஒட்டுமொத்த சிறுதானியத்திற்கும் சேதம் விளைவிக்கின்றன.



விவசாய சம்மேளனம் மற்றும் கமநல சேவை நிலையம் ஆகியன விரைந்து நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் சிறுதானிய செய்கைகள் கட்டாக்காலிகளால் முழுமையாக அழிக்கப்படக்கூடிய நிலை காணப்படுகிறது.

மே மாதம் 28 வரை கால்நடைகளை கட்டுப்படுத்த வேண்டும் என பொதுவான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ள போதிலும் கால்நடை வளர்ப்போர் பொறுப்பற்று நடந்து கொள்வதாக மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். (நி-30)

# செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

யா/செட்டித்தெரு மெ.மி.த.க பாடசாலையின் 'செயற்பட்டு மகிழ்வோம் திறனாய்வு-2023' நிகழ்வானது நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் கந்தசாமி சசிகரன் தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர் செல்வி.சுமதி கந்தசாமி கலந்து கொள்வார். (நி)



கொடிகாமம் போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் புலமைப்பரிசில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்:-சுபேசன்)



படைப்பாளுமை தாட்சாயணியை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று தொல்புரம் மேற்கு சுழிபுரம் சத்தியமனை நூலகத்தில் நடைபெற்றது.

திருமதி. வள்ளியம்மை சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அரச உத்தியோகத்தர்கள், கல்விப் புலம் சார்ந்தவர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படம்:-கஜிந்தன்)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ குடத்தனை கரையூர் அ.மி.த.க பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு செல்வா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் மு.கதிர்காமலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலர் குமாரசாமி பிரபாகர மூர்த்தியும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் கருணாமூர்த்தியும் பத்மகாந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (நி-60)

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்




(தருமபுரம்)

தருமபுரம் நெத்திலி ஆறு முத்துமாரியம்மன் ஆலயத்தின் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சித்திரத்தேர் நேற்று காலை 9.20 மணிக்கு இடம்பெற்றது.

அத்துடன் இன்று தீர்த்தவுற்சவம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (நி-316)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வைரலாகும் கலைஞனின் கைவண்ணம்



(கென்யா)

மூன்று தலைகளைக் கொண்ட சிறுத்தை உண்மையில் உள்ளதா என்று சந்தேகத்தை எழுப்பும் வகையில் வன விலங்கு புகைப்படக் கலைஞர் ஒருவர் புகைப்படம் எடுத்து வெளியிட்டுள்ளார். அவரின் இந்தப் புகைப்படம் தற்போது வைரலாக பரவி வருகிறது.

இந்தப் புகைப்படம் சாத்தியமா என்று ஆச்சரியத்துடன் பலர் சமூக வலைத்தளங்களில் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

இது போன்று காட்சியை எளிமையாக எடுத்து விட முடியாது. இந்த அபூர்வமான புகைப்படத்தை விம்பிள்டன் பகுதியைச் சேர்ந்த பால் கோல்ட்ஸ்டைன் என்ற புகைப்படக் கலைஞர் எடுத்துள்ளார்.

கென்யாவில் அமைந்துள்ள மசாய் மாரா தேசிய பூங்காவில் இந்த புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த சரியான புகைப்படத்தை எடுக்க அவர் சுமார் 6 மணி நேரத்திற்கு மேல் காத்துக்கொண்டு இருந்ததாகக் கூறியுள்ளார்.

மழை பெய்து கொண்டு இருக்கும் போது சுமார் 6 மணி நேரம் காத்திருப்பில் இந்த அபூர்வமான காட்சியை அவர் கமரா மூலம் பதிவு செய்ததில் பெரும் மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்துள்ளார்.

சிறுத்தைகள் அழிந்து கொண்டு இருக்கும் விலங்குகளில் ஒன்றாக உள்ளது. மணிக்கு சுமார் 100 கி.மீ வேகத்தில் ஓடும் சிறுத்தைகளை ஒன்றாய் ஒரே கோட்டில் புகைப்படமாக எடுத்த புகைப்படக் கலைஞருக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன. (நி)

# உக்ரைனின் வெடிமருந்து இருப்புகளை உயர்த்த அமெரிக்கா 400 மில்லியன் டொலர்கள் இராணுவ உதவி

(வோஷிங்டன்)

ரஷ்யாவுடனான அதன் தீவிரப் போரின் போது தீர்ந்துபோன உக்ரைனின் வெடிமருந்து இருப்புகளை உயர்த்துவதற்காக உக்ரைனுக்கு அமெரிக்கா 400 மில்லியன் டொலர்கள் இராணுவ உதவியை வழங்க உள்ளது.

இதில் உயர் துல்லியமான ஹிமார்ஸ் பீரங்கி ரொக்கெட்டுகள் மற்றும் ஹோவிட்சர்கள் அடங்குவதாக, வெளியுறவு செயலாளர் ஆண்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் தாக்குதல்களை எதிர்கொள்ள பீரங்கிகளும் குண்டுகளும் தேவை என முன்பு உக்ரைனிய ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலென்ஸ்கி கோரிக்கை விடுத்திருந்தமைக்கு அமைய இந்த உதவிவழங்கப்படுகின்றது.

ஆறுகள் மற்றும் பள்ளங்களை கடக்க அனுமதிக்கும் கவச வாகனங்கள் உள்ளிட்ட இராணுவ உதவிகளை உக்ரைனுக்கு வழங்குவது குறித்து எதிர்வரும் வாரங்களில் ஆலோசிக்கப்படவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், பாக்முட் மீதான அதன் பலமாத தாக்குதலைத் தொடர்ந்தது, ரஷ்ய கூலிப் படையினர் கிழக்கு டொனெட்ஸ்க் பகுதியில் உள்ள நகரத்தை சுற்றி வளைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனித்தனியாக, கடந்த செப்டெம்பரில் ரஷ்ய ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட கார்கீவ் பிராந்தியத்தின் வடகிழக்கு நகரமான குபியன்ஸ்கில் பகுதியளவு வெளியேற்றத்துக்கு உக்ரைன் உத்தரவிட்டுள்ளது. (நி)

# உக்ரைனில் குடியிருப்பு மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்

## 11 பேர் உயிரிழப்பு

(கீவ்)

உக்ரைன் நாட்டின் ஜபோரிஜ்ஜியா நகரில் மக்கள் வசிக்கக் கூடிய, 5 அடுக்குமாடிகள் கொண்ட குடியிருப்புக் கட்டடம் மீது நடந்த ரஷ்ய ஏவுகணைத் தாக்குதலால் அந்த கட்டடம் முற்றிலும் சேதமடைந்தது. இந்தத் தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 11 ஆக உள்ளது.

இந்த ஏவுகணை வீச்சில் குழந்தை ஒன்றும் உயிரிழந்துள்ளது. ரஷ்யாவை சேர்ந்த எஸ்-300 ரக ஏவுகணை, அந்த கட்டடம் மீது தாக்குதல் நடத்தி உள்ளது என உக்ரைனின் உள்ளூர் நிர்வாக அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து உள்ள உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, எங்களது மக்களுக்கு ஒவ்வொரு நாளையும் பயங்கர நாளாக மாற்றுவதற்கு அந்த பயங்கரவாத நாடு விரும்புகிறது என ரஷ்யாவை குறிப்பிட்டார். ஆனால், எங்களது நிலத்தில் தீங்கு செய்பவர்கள் ஆட்சி செய்ய முடியாது. ஆக்கிரமிப்பாளர்கள் அனைவரையும் நாங்கள் ஓட ஓட விரட்டுவோம். ஒவ்வொரு தாக்குதல் சம்பவத்திற்கும் அவர்களே முழு அளவில் பொறுப்பாவார்கள் என்றும் தெரிவித்தார். (நி)

# ஒட்சிசன் ஆலையில் தீ 6 பேர் உயிரிழப்பு

## பங்களாதேஷில் துயரச் சம்பவம்



(டாக்கா)

தென் கிழக்கு பங்களாதேஷில் உள்ள ஒட்சிசன் ஆலையில் பதிவான வெடிப்பை தொடர்ந்து ஏற்பட்ட தீப்பரவலில் இதுவரையில் 6 பேர் பலியானதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

தென்கிழக்கு துறைமுக நகரமான சிட்டகொங்கில் இருந்து 40 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சீதகுண்டா பகுதியில் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

வெடிவிபத்துக்கான காரணம் என்ன வென்று தகவல்கள் வெளியாகவில்லை என தீயணைப்புப் பிரிவினர் குறிப்பிடுகின்றனர்.

குறித்த ஆலையை சுற்றி யுள்ள 2 கிலோமீற்றர் பரப்பளவில் இதன் தாக்கம் பதிவாகியுள்ளது.

இந்நிலையில் மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (நி)

# பாகிஸ்தானில் சிறுபான்மையினர் தாக்குதல்களுக்கு உள்ளாகின்றனர்

## ஐ.நாவில் இந்தியா புகார்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் உள்ள சீக்கியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் போன்ற சிறுபான்மையினர் தொடர்ந்து தாக்குதலுக்கு ஆளாகி வருவதாக ஐ.நா மனித உரிமைச் சபைக் கூட்டத்தில் இந்தியா புகார் அளித்துள்ளது.

பாகிஸ்தானின் பிரதிநிதி இந்தியாவுக்கு எதிராக பொய்யான பிரச்சாரம் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் கடந்த பத்தாண்டுகளில் காணாமல் போனவர்கள் தொடர்பாக 8 ஆயிரத்து 463 புகார்கள் அந்நாட்டின் விசாரணை ஆணையத்தால் பெறப்பட்டிருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் மக்கள் கொடூரமாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இந்து மற்றும் சீக்கிய இளம் பெண்கள் கட்டாய மதமாற்றம் செய்யப்படுவதாகவும் ஐ.நா மனித உரிமை சபையில் இந்தியா தெரிவித்துள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: சூரி 12 செவ் 9 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/ தொழில்: A/L தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் கிறிஸ்தவமும் ஏற்றுக் கொள்ளப்படும்<br>தொ.இ: B/13384 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 56 சூரி 9 செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/ தொழில்: BSc,QS<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: G/13348 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: சூரி 10 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Mechanical Engineering Diem வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13386 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: சூரி 5 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/ தொழில்: A/L (காசாளர் தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: படித்த மாப்பிள்ளை விவாகரத்தானவர்<br>தொ.இ: G/13450 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>கி.பா: 12 ½ சூரி . செவ் 2 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: பல் வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/13387 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: சூரி 6 செவ் 8 இல்<br>தகைமை/ தொழில்: BSc பட்டதாரி விஞ்ஞான ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: நிரந்தரத்தொழில் விவாகரத்தானவர்<br>தொ.இ: G/13452 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: சூரி 4 செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: உயர்தரம் (பெக்கோ சாரதி)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/13388 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>கி.பா: சூரி , செவ் 3 இல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: சித்த மருத்துவ மாணவி<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/13453 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 119





(அந்நாளில் பழையாறை நகருக்கு நந்திபுரி என்னும் பெயரும் உண்டு. சில காலத்துக்கு முன்பு சோழ மண்டலம் பல்லவர் ஆட்சியின் கீழ் இருந்த போது நந்திபுரி என்னும் பெயர் பிரபலமாய் விளங்கியது. ஆகையினாலேயே இந்தப் பழம் பாடலில் நந்திபுரி மன்னர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது)

பாடலைக் கேட்டதும் புலவர்கள் அத்தனை பேரும் "நன்று! நன்று!" என்று கூறித் தங்கள் பாராட்டுதலைத் தெரிவித்தார்கள்.

"புத்தர்கள் இவ்வளவு நன்றியுடையவர்களாயிருப்பது வியப்பு, வியப்பு!" என்றார் ஒரு வீர சைவக் கவிராயர்.

"ஆம் அது வியப்பான காரியந்தான். உலகபுரம் புத்தமடத்துக்கு நான் செய்த சேவை மிக அற்பம். அதற்கு இவ்வளவு பாராட்டு வேண்டுமா?" என்றார் மன்னர்.

"சக்கரவர்த்தியின் வண்மைத் திறத்தை அனுபவித்தவர் யார் தான் என்றென்றைக்கும் நன்றி செலுத்திப் பாராட்டாதிருக்க முடியும்? இந்திரனும் சூரியனும் சிவபெருமானும் கூடத் தங்களுடைய வண்மையின் பயனை அனுபவித்திருக்கிறார்கள்!" என்றார் மற்றோர் புலவர் சிரோமணி.

சுந்தர சோழர் முகத்தில் புன்னகை தவழ, "அது என்ன? இந்திரனும் சூரியனும் சிவபெருமானும் கூடவா? அவர்கள் எதற்காக என்னிடம் நன்றி செலுத்த வேண்டுமாம்?" என்று கேட்டார்.

"ஒரு பாடல் சொல்ல அனுமதி தரவேண்டும்!" என்றார் அப்புலவர்.

"அப்படியே நடக்கட்டும்!" என்றார் மன்னர்.

புலவர் கையில் கொண்டு வந்திருந்த ஓலையைப் பிரித்துப் படிக்கலுற்றார்

"இந்திரன் ஏறக் கரி அளித்தார்
பரிஏ ழளித்தார் செந்திரு மேனித்
தினகரற்கு சிவனார் மணத்துப்
பைந்துகி லேறப் பல்லக்களித்தார்,
பழையாறை நகர்ச் சுந்தரச்சோழரை
யாவரொப்பார்கள் இத் தொன்னிலத்தே"

இத்பாடலைப் புலவர் படித்து முடித்ததும் சபையிலிருந்த மற்ற புலவர்கள் எல்லாரும் சிரக்கம்ப கரக்கம்பம் செய்தும், 'ஆஹாகாரம்' செய்தும், "நன்று! நன்று!" என்று கூறியும் தங்கள் குதுகலத்தை வெளியிட்டார்கள்.

சுந்தரசோழர் முக மலர்ச்சியுடன், "இந்தப் பாடலின் பொருள் இன்னதென்பதை யாராவது விளக்கிச் சொல்ல முடியுமா?" என்றார்.

ஒரே சமயத்தில் பலர் எழுந்து நின்றார்கள். பிறகு நல்லன் சாத்தனாரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் உட்கார்ந்தார்கள். நல்லன் சாத்தனார் பாடலுக்குப் பொருள் கூறினார்.

"ஒரு சமயம் தேவேந்திரனுக்கும் விருத்திராசுரனுக்கும் போர் நடந்தது. அதில் இந்திரனாருடைய ஐராவதம் இறந்து போய் விட்டது. அதற்கு இணையான வேறொரு யானை எங்கே கிடைக்கும் என்று இந்திரன் பார்த்துக் கொண்டிருந்தான்.

கடைசியில் பழையாறை நகரில் வாழ்ந்த சுந்தரசோழ சக்கரவர்த்தியிடம் அவன் வந்து 'ஐராவதத்துக்கு நிகரான ஒரு யானை வேண்டும்' என்று யாசித்தான். 'ஐராவதத்துக்கு நிகரான யானை என்னிடம் இல்லை.

அந்தப் பிரார்த்தனைப் பாடலை இவ்விடம் சொல்ல அருள் கூர்ந்து அனுமதி தரவேண்டும்! என்றார்.

"அப்படியே சொல்லவேணும் கேட்கக் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் சக்கரவர்த்தி.

புலவரும் பின்வரும் பாடலை இசையுடன் பாடினார்.

"போதியந் திருநிழல் புனித! நிற்
பரவுதும் மேதகு நந்திபுரி மன்னர்
சுந்தரச் சோழர் வண்மையும்
வனப்பும் திண்மையும் உலகிற்
சிறந்துவாழ் கெனவே!"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

# பெரிய சோம்பேறி யார்?

(நேற்றைய தொடர்ச்சி)

ஐவரும் வெவ்வேறு திசைகளில் பிரிந்தார்கள்.

ஓராண்டு கழிந்தது. ஐந்து அமைச்சர்களும் நாடு திரும்பினார்கள். அவர்களை வரவேற்றான் அரசன்.



முதலாம் அமைச்சரைப் பார்த்து, உம் அனுபவங்களைச் சொல்லும். எனக்கு மருமகனாகும் சோம்பேறியை எங்கே கண்டுபிடித்தீர்? சொல்லும், என்று ஆர்வத்துடன் கேட்டான் அவன்.

அரசே! நான் பல நாடுகளுக்குச் சென்றேன். எத்தனையோ விந்தையான அனுபவங்கள் எனக்கு ஏற்பட்டன, இருந்தும் சோம்பேறிகளைத் தேடி அலைந்தேன். எத்தனையோ சோம்பேறிகளைச் சந்தித்தேன்.

யாருமே நம் இளவரசியார்க்குப் பொருத்தமானவரார்கத் தெரியவில்லை. பெரிய சோம்பேறியைச் சந்திக்கும் பேறுபெற்றேன். என்றான் அமைச்சன். அவன் என்ன செய்தான்? என்று கேட்டான் அரசன்.

அந்தச் சோம்பேறியை வழியில் சந்தித்தேன். அரசே! அவனுடைய ஒரு கால் சேற்றிலும் மற்றொரு கால் சாலையிலும் இருந்தது. அப்படியே நின்று கொண்டிருந்தான். நான் அவனைப் பார்த்து, ஏன் இப்படி நிற்கிறாய்? என்று கேட்டேன். இரண்டு மாதமாக நான் இப்படித் தான் நின்று கொண்டிருக்கிறேன். சேற்றில் உள்ள காலை எடுக்க எனக்குச் சோம்பலாக உள்ளது, என்று பதில் தந்தான் அவன், என்றான் அமைச்சன்.

இளவரசிக்குப் பொருத்தமான பெரிய சோம்பேறி தான் அவன், என்று மகிழ்ச்சியாகச் சொன்னான் அரசன்.

குறுக்கிட்ட இரண்டாம் அமைச்சன், அரசே! நானும் ஒரு சோம்பேறியைப் பார்த்து விட்டு வந்திருக்கிறேன் என்றான். உன் அனுபவங்களைச் சொல், என்றான் அரசன்.

அரசே! உங்கள் கட்டளைய நிறைவேற்றுவதற்காகப் பல மலைகளையும் ஆறுகளையும் கடந்து சென்றேன். ஓர் ஊரில் மிகப் பெரிய சோம்பேறியைக் கண்டேன். அவனுக்கு மிக நீண்ட தாடி இருந்தது. அந்தத் தாடி ஊர் முழுவதும் பரவிக் கிடந்தது. பார்ப்பதற்கு மேகக் கூட்டம் போல இருந்தது. இரண்டு மீசைகளும் நீண்டு இருந்தன. ஒரு மீசையில் குருவி ஒன்று கூடு கட்டி இருந்தது. இன்னொரு மீசையில் எறும்புப் புற்று வளர்ந்து இருந்தது. நான் அவனைப் பார்த்து, எதற்காக இவ்வளவு நீண்ட தாடியும் மீசையும் வளர்த்து இருக்கிறாய்? என்று கேட்டேன்.

சோம்பேறியான அவன் எனக்கு எந்தப் பதிலும் தரவில்லை. அவன் அருகில் முக சவரம் செய்யும் கத்தி துருப்பிடித்துக் கிடந்தது. அங்கிருந்தவர்கள் அவன் முக சவரம் செய்து முப்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது என்றார்கள்.

நல்ல சோம்பேறி தான், என்ற அரசன், அவன் தாடி மீசையைச் சொறிந்து கொள்கிறானா அல்லது அதற்கும் சோம்பலா? என்று கேட்டான்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நல்ல தலைவன் தான் தலைவன் என்பதை வார்த்தைகளால் அல்ல செயலால் உணர்த்துபவனாக இருக்க வேண்டும். ~ விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கூனியின் சதித் திட்டம் கைகேயி ஊடாக...

இந்த நாட்டில் எதற்காக அழுவது என்று தெரியாத அளவில், தமிழ் மக்கள் மீது எல்லாத் துன்பமும் திணிக்கப்படுகிறது.

உண்மை. வன்னிப் போரில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் இழப்பு. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாத துன்பம்.

நீண்ட நெடுங்காலமாக சிறைகளில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகளின் அவலம் என ஒரு பெரும் துன்பப் பட்டியல் நீண்டு செல்கையில், தமிழர் தாயகத்தில் நடக்கின்ற நில அபகரிப்பு, அத்துமீறிய விகாரை அமைப்பு, சட்டவிரோத சிங்களக் குடியேற்றம் என நடக்கின்ற நீரோசை தாங்க முடியவில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், இப்போது தமிழக மீனவர்களையும் எங்கள் கடற்றொழிலாளர்களையும் மோதவைத்து தமிழகத்துச் சகோதரர்களையும் எங்கள் ஈழத் தமிழர்களையும் பிரித்து விடுவதற்குச் செய்கின்ற சதித்திட்டம் தாங்க முடியாது.

அந்தோ! கொடுமை. எங்கள் வடபகுதிக் கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படுமென இலங்கை வெளிவிவகார அமைச்சர் பாராளுமன்றத்தில் கூற, தமிழகத்து மீனவச் சகோதரர்கள் அதன் விளைவு குறித்து ஆராயாமல், களத்தில் குதித்து எங்கள் கடல்வளம் முழுவதையும் அள்ளிச் செல்லத் தலைப்பட்டுள்ளனர்.

இதனால் எங்கள் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது.

ஆம், எமது கடல்வளம் முழுவதையும் தமிழகத்து மீனவச் சகோதரர்கள் வாரிச் சுருட்டிக்கொண்டு சென்றால், நம்மவர்கள் என்னதான் செய்ய முடியும்.

எனவே தமிழகத்து உடன் பிறப்புகளுடன் ஈழத் தமிழர்களைப் பகையாக்க கூனி தீட்டிய திட்டம்தான் எங்கள் கடற்பரப்பில், தமிழக மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதிப்பதென்ற அறிவிப்பாகும்.

இந்த அறிவிப்பை தக்கதெனக் கருதி, வடபகுதிக் கடற்பரப்பில் எங்கள் தமிழக மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவார்களாயின், அது தசரத மன்னனின் மரணத்துக்கும் இராமபிரான் காடேகுவதற்கும் காரணமாக இருந்த கைகேயி கேட்ட இரு வரங்களுக்கு ஒப்பானதாகும்.

எனவே சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களை எவ்வாறெல்லாம் நலினப்படுத்த முடியுமோ அதை இம்மியும் குறையாமல் செய்து வருகிறது.

இந்த நிலையைத் தமிழக மீனவர்கள் தயவு செய்து புரிந்து கொள்ள வேண்டும்.

கூடவே கூனியின் சதித்திட்டத்தின் உள்ளார்ந்தத்தைத் தமிழகத்து அரசியல் தலைவர்களுக்கு நம் தமிழ் அரசியல் தலைவர்கள் எடுத்துக்கூறி, நிலைமையைச் சுமுகமாக்க வேண்டும்.

இதைச் செய்யாமல் அரசியல் இலாபம் தேடுவதற்கு நம்மில் யார் முற்பட்டாலும் அதன் விளைவு பாரதூரமானதாகவே இருக்கும்.

# பிரபாகரன் உயிருடன் உள்ளார் விரைவில் ஆதாரங்கள் வெளிவரும்

## பழ.நெடுமாறன் மீண்டும் தகவல்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்ற அறிவிப்பு இலங்கைத் தமிழர்கள் அனைவருக்கும் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில் அதற்கான ஆதாரங்கள் கிடைத்தவுடன் அதை ஊடகங்களில் வெளியிடப்போவதாக உலகத் தமிழர் கூட்டமைப்புத் தலைவர் நெடுமாறன் மீண்டும் தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் உயிருடன் இருப்பதாகவும், விரைவில் அவர் பொது வெளியில் வருவார் என்றும் நெடுமாறன் தகவல் வெளியிட்ட சில வாரங்களுக்குப் பிறகு அவரது அறிக்கை மீண்டும் வந்துள்ளது.

எனினும் முன்னதாக இந்த கூற்றை மறுத்த இலங்கையின் இராணுவப் பேச்சாளருமான பிரிகேடியர் ரவி ஹேரத், பிரபாகரன் இறந்து விட்டார் என்பதை நிரூபிப்பதற்கான "மரபணுச் சான்றிதழ்கள்" உட்பட அனைத்து பதிவுகளும் இருப்பதாக தெரிவித்திருந்தார். (4,7)

## கச்சதீவில் சங்கிலி அறுப்பு கைதானவர் விளக்க மறியலில்

(யாழ்ப்பாணம்)

தமிழக பக்தர் ஒருவர் உட்பட இரு பக்தர்களின் தங்க சங்கிலியை அறுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 14ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ஷாளினி ஜெயபாலசந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

கச்சதீவு திருவிழாவில் கலந்து கொண்ட தமிழகத்தை சேர்ந்த பெண் பக்தர் ஒருவருடைய 8 பவுண் தங்கசங்கிலி ஒன்று அறுக்கப்பட்டுள்ளது.

தான் ஆராதனையில் கலந்து கொண்டிருந்த போது தனக்கு பின்னால் நின்றிருந்த ஆணொருவர் சங்கிலியை அறுத்ததாகவும் அதனைதான் அவதானித்தபோது, அந்நபர் அறுத்த சங்கிலியை தனக்கு பின்னால் இருந்த பெண்ஒருவரிடம் கொடுத்ததும் அந்த பெண் கூட்டித்திற்குள் கலந்து அவ்விடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளார் என பொலிஸாரிடம் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

குறித்த தமிழக பெண்ணுக்கு பின்னால் நின்று சங்கிலியை அறுத்தார் என்ற குற்றச்சாட்டில் மட்டக்களப்பை சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டார்.

அதேவேளை இலங்கையைச் சேர்ந்த பெண்ணொருவரின் ஒன்றரை பவுண் சங்கிலியும் ஆராதனையின் போது களவாடப்பட்டுள்ளது. அப்பெண்ணின் பின்னாலும் கைது செய்யப்பட்ட நபர் நின்றதை அந்த பெண் அவதானித்துள்ளார்.

இரு பெண்களினதும் சங்கலியையும் கைது செய்யப்பட்ட நபரே அறுத்தார் எனும் குற்றச்சாட்டில் சந்தேகநபராக நெடுந்தீவு பொலிஸாரினால் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்துறை பதில் நீதவான் முன்னிலையில் முற்படுத்தியதை அடுத்து, சந்தேகநபரை 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் தடுத்து வைக்க உத்தரவிட்ட பதில் நீதவான் தப்பிச் சென்றதாக கூறப்படும் பெண் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து அப்பெண்ணை கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார். (4,7,33)

## வவுனியாவில் சுகயீனத்தால் கைதி ஒருவர் மரணம்

(வவுனியா)

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் சுகயீனம் காரணமாக நேற்று மரணமடைந்தார்.

குறித்தநபர் போதைப் பொருள் தொடர்பான வழக்கில் கைதுசெய்யப்பட்டு, வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவருக்கு நேற்று திடீர் சுகயீனம் ஏற்பட்டது. இதனையடுத்து அவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் மரணமடைந்தார்.

சம்பவத்தில் கருணாரத்தின பண்டார என்ற 56 வயதான நபரே மரணமடைந்தார்.(4,7,299)

## மாட்டிறைச்சியுடன் ஒருவர் அனலைதீவில் கைது

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு பாலத்திலிருந்து ஊர்காவற்துறை கண்ணகை அம்மன் பாலம் ஊடாக நேற்றைய தினம் கடத்தவிருந்த ஒருதொகை மாட்டிறைச்சியுடன் அதனை கடத்தி வந்த நபரை அனலைதீவில் பாதுகாப்பு கடமையிலிருந்த பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இக் குற்றச் செயலுடன் தொடர்புடைய சந்தேக நபர் யாழ் - மாதகல் பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை ஊர்காவற்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் அவர் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளார். (4,7,104)

## இ.மி.ச மறுசீரமைப்பு தொடர்பில் கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையானது அதன் மறுசீரமைப்பு வேலைத் திட்டம் தொடர்பாக, இலங்கை மின்சார சபையின் உயர் நிர்வாகத்திடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கும் முகமாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது புதிய சட்ட மூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்படவேண்டிய மறுசீரமைப்பு வேலைத் திட்டங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதன் ஆரம்பமாக, மறுசீரமைப்பிற்கு அவசியமான மின்சார விநியோகம் தொடர்பான ஒதுக்கப்பட்ட மண்டலங்களில் தனிக் கணக்குகள் மற்றும் செயற்பாடுகளை பராமரிப்பது தொடர்பான தேவைகள் பூர்த்தி செய்யப்படும் அதேவேளை, மனிதவள மேலாண்மை, சொத்து மேலாண்மை மற்றும் நிதி மேலாண்மைக்கு தேவையான தணிக்கைகளை துரிதப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு அதற்கு மேலதிகமாக, மறுசீரமைப்பு செயற்பாட்டின்போது இயன்றளவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவும், அதே போன்று செயற்திறனை அதிகரித்து செலவைக் குறைக்கவும் முன்மொழியப்பட்டது. (4,7)


## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** கே.எம்.கே கடல் உணவு (பிரைவேட்) லிமிடெட், காளிகோவிலடி மூளாய், மூளாய் அம்பன், அம்பன் மருத்துவமனை, கடற்கரை பகுதி மணற்காடு, குடத்தனை, குடத்தனை நீர் வழங்கல் மணற்காடு, நடுக் குடத்தனை [illegible] ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூசணிச் செய்கையினை துவசம் செய்த யானைகள்

## கவலை வெளியிட்ட விவசாயி



(தருமபுரம்)

புளியம்பொக்கணை கம நலசேவை திணைக்களத்திற் குட்பட்ட தருமபுரம் பகுதியில் இலட்சம் ரூபாய் செலவு செய்து பூசணி செய்கை மேற்கொள் ளப்பட்டிருந்த நிலையில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் நான்கு காட்டு யானைகள் பூசணிக்காய் களை முற்றுமுழுதாக துவசம் செய்துள்ளன.

இதுபோன்று கடந்த வருட மும் தமது பூசணிச் செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடை செய்து விற்பனைக்காக மூடை யில் பாதுகாப்பாக வைக்கப்பட்டி ருந்த நிலையில் சுமார் மூன்று இலட்சம் பெறுமதியான பூசணி க்காயை காட்டுயானைகள் தின்றழித்துள்ளதாக குறித்த விவசாயி தெரிவித்தார். அதற்காக எந்தவித இழப்பீடும் எனக்குக் கிடைக்கவில்லை. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரடியாக எமது பகுதியை பார்வையிட்டு எமக்கான உரிய தீர்வினை பெற்று தர வேண்டு மென அவர் தெரிவித்தார். (நி-316)

# மணல் கடத்தும் கும்பல்; சான்றுப் பொருட்களையும் கடத்தினர்


## இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை எனக் கூறும் ஆத்திமோட்டை மக்கள்

(மன்னார்)

மன்னாரில் தொடர்ச்சியாக மணல் கொள்ளையில் ஈடு பட்டுவரும் நானாட்டான் பிர தேச சபை உறுப்பினர் தலை மையிலான குழுவினர் நேற்று முன்தினம் பொலிஸ் நிலை யத்திற்கு ஒப்படைப்பதற்காக கைப்பற்றி வைத்திருந்த மணல் அகழும் பாரிய இயந் திரத்தை பாதுகாத்துக் கொண்டி ருந்த பொதுமக்களையும் அரச அதிகாரிகளையும் தாக்கி சான்றுப் பொருளான மணல் அகழும் இயந்திரத்தை கடத்திச் சென்றுள்ளனர்

கடந்த வெள்ளிக்கிழமை உரிய அனுமதி இன்றி அரச காணி ஒன்றில் காடுகள் அழி க்கப்பட்டு மணல் அகழ்வுக்கான அடிப்படை நிபந்தனைகளை மீறி 20 அடி ஆழம் வரை தோண்டி மணல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கும் பலை கைது செய்யக் கோரியும் மணல் அகழ்வுக்கு பயன்ப டுத்திய வாகனத்தைக் கைப்பற றவும் பலமுறை அறிவுறுத்தி யும் எந்தக் கைது நடவடிக் கையும் நடைபெறவில்லை.

அதேநேரம் சான்றுப் பொருட்களையும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லவில்லை. இந்த நிலை யில் குறித்த சான்றுப் பொருளை



பொதுமக்கள் விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் பாதுகாத்து வந்த நிலையில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு கடமையில் இருந்து விலகி னர்.

அதனைத் தொடர்ந்து அப் பகுதி கிரம உத்தியோகத்தர் மற்றும் கிரம அபிவிருத்தி சங் கத்தினர் சான்றுப் பொருளான ஜேசிபி இயந்திரத்தை பொலி ஸாரிடம் ஒப்படைப்பதற்காக காத்திருந்த நிலையில் மணல் அகழ்வின் உரிமையாளரும் அவருடைய உள்ளூர் சகாக்க ளும் இணைந்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த கிராம அபிவிருத்தி சங்க உறுப்பி னரும் கிராம உத்தியோக த்தர்கள் உள்ளடங்கலான அரச அதிகாரிகளை தாக்குவதற்கு முற்பட்டனர்.

அனைவரும் அங்கிருந்து பாதுகாப்புக்கு வேறு இடங்களு க்கு ஓடிச் சென்ற நிலையில் மணல் மாபிய கும்பல் சான்றுப் பொருளான JCP இயந்திர த்தை கடத்தி சென்றுள்ளதுடன் அனைத்து விதமான தட யங்களையும் அழித்துள்ளனர். அதேநேரம் அனுமதியற்ற இடங்களில் கொள்ளையிட்ட மணல்களை களஞ்சியப்படுத் தியுள்ளனர்.

மணல் மாபியா கும்பல் பல சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் இது வரை பொலிஸார் எந்தவித கைது நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்பது டன் மணல் மாபியா கும்பலுக்கு பொலிஸார் ஆதரவையும் பாது காப்பையும் வழுங்கி வருவதாக ஆத்திமோட்டை மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (நி-285)

# மாசிமகப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ் தானத்தில் மாசி மகப் பெருவிழா இன்று திங்கட் கிழமை காலை 5.30 மணி க்கு உஷத் கால பூசையுடன் ஆரம்பமாகி முற்பகல் 10.30 மணிக்கு அம்பாள் தேரில் உள் வீதியுலா வலம் வருவார் என ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தா னத்தின் தலைவர் கலாநிதி. ஆறு.திருமுருகன் அறிவித் துள்ளார். (நி)

# நடத்துநர்கள், சாரதிகள் இன்மையால் சீரான போக்குவரத்து சேவைகளை வழங்க முடியாதுள்ளது

## கிளிநொச்சி சாலை நிர்வாகம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு தேவையான சீரான போக்கு வரத்து சேவைகளை வழங்க முடியாது உள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களுக் கான போக்குவரத்து வசதிகள் இல்லாததால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

பின்தங்கிய பல பிரதேச ங்களுக்கு பேருந்து சேவை களை நடத்துமாறு கோரிக் கைகளை முன்வைத்து வருகின்ற போதும் அவற்றை தட்டிக்களித்து சேவைகள் வழங்கப்படுவதில்லையென வும் பலரும் குற்றஞ்சாட்டியுள் ளனர்.

இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பாக இலங்கை போக்குவரத்து சபையின் கிளி நொச்சி பேருந்து சாலை நிர் வாகத்துடன் தொடர்பு கொண்டு வினவிய போது மாவட்டத்தில் சேவையில் ஈடுபடக்கூடிய வகையில் 28 வரையான பேருந்துகள் உள்ளன.

ஆனாலும் சாரதிகளும் நடத்துநர்களும் இல்லாமை யால் முழுமையான சேவை களை முன்னெடுக்க முடியாது உள்ளது. அதேநேரம் தற் போது கடமையாற்றும் நடத்து நர்களும் சாரதிகளும் வெளி மாவட்டங்களிலிருந்து வந்தே சேவைகளில் ஈடுபடுகின்ற னர்.

இது போன்ற காரணங் களால் குறித்த பேருந்து சேவைகளை முன்னெடுக்க முடியாது இருப்பதாகவும் குறி த்த நிர்வாகம் தெரிவித்து ள்ளது. (நி-315)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 280 | 250 | 300 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 340 | 350 | 350 |
| தக்காளி | 80 | 100 | 100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 240 |
| கோவா | 100 | 80 | 100 | 120 |
| கரட் | 100 | 180 | 200 | 240 |
| பூசணி | 60 | 80 | 60 | 80 |
| புடோல் | 200 | 200 | 140 | 200 |
| வாழைக்காய் | 180 | 160 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 130 | 150 |
| பாகற்காய் | 450 | 400 | 450 | 600 |
| வெண்டக்காய் | 320 | 250 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 400 |
| லீக்ஸ் | 280 | 240 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 180 | 280 |
| கறிமிளகாய் | 350 | 450 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 2000 | 1800 | 1400 | 1500 |
| போஞ்சி | 200 | 250 | 240 | 400 |
| கத்தரிதம்புள்ள | 280 | 200 | 200 | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 100 | 160 |
| தேசிக்காய் | 180 | 200 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 80-110 |
| இராசவள்ளி | 350 | 300 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 160 | 140 | 120 | 240 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 28 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 120 | 100 | 120 |



கிளிநொச்சி றோயல் முன்பள்ளியின் 33 ஆவது அகவையில் செயற்பட்டு மகிழ்வோம் திறன் வெளிப்பாட்டு நிகழ்வும் ,பள்ளி செல்லும் மழலைகளை வழியனுப்பும் நிகழ்வும் நேற்று முன்தினம் சனிக்கிழமை பாடசாலையின் விளையாட்டுத்திடலில் அதிபர் RTN கனகரத்தினம் அருள்செல்வம் தலைமையில் நடைபெற்றது. (படங்கள்-குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசுக் கட்சி...

மாநகர சபை உறுப்பினர்களுடனான கலந்துரையாடலில், பெரும்பாலானோர் சொலமன் சிறிலின் பெயரை முன்மொழிந்தனர்.

அதன் அடிப்படையில் இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக, கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அறிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபை முதல்வர் தெரிவு எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் சொலமன் சிறிலுக்கான ஆதரவை திரட்டிய பின்னர் அவரை முதல்வர் வேட்பாளராக களமிறக்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். 19ஆம் திகதி உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (4-7,33,104)

## விபரீத முடிவெடு...

தொங்கி உயிர்மாய்த்துள்ளார்.

அவரது கையில் உள்ள வசனங்களை பார்வையிட்ட பொலிஸார், காதல் தோல்வியால் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கின்றனர்.

குறித்த இளைஞரின் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பொலிஸார் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7,104)

## மீனவ குடும்பங்...

நேற்று வட மாகாணக் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எக்காரணங்கொண்டும் இந்திய இழுவைப் படகுகள் எமது கடலெல்லைக்குள் வருவதற்கோ இந்தியா மீனவர்களுக்கு எமது கடற்பரப்பில் அனுமதியளிப்பதில்லை என மக்கள் பிரதிநிதிகளாகிய பாராளுமன்ற உறுப்பினர்களும் மீனவ சங்கப் பிரதிநிதிகளும் இணைந்து முடிவொன்றை எடுத்துள்ளோம்.

அதற்காக இந்த மண்ணிலே கடற்றொழிலையே நம்பி வாழ்கின்ற 50 ஆயிரம் குடும்பங்களின் தலைவிதிகளை நினைத்து அவர்களோடு இணைந்து அவர்களுக்காக தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபடுவதோடு நின்று விடாது நியாயமான தீர்வினைக் காண்பதற்கு உழைப்போம் எனத் தெரிவித்தார். (4-7)

## இளைஞர்...

இளைஞன் அச்சுவேலி நகருக்கு வந்திருந்த நிலையில் மற்றைய குழுவை சேர்ந்தவர்கள் அவரை துரத்தி துரத்தி வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் பாரதி வீதி பத்தமேனியை சேர்ந்த 27 வயதான இளைஞன் ஒருவரே வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-7,33)

## மார்ச் 19க்கு...

சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் விடுத்துள்ளன.

இதன்படி எதிர்க்கட்சியில் அங்கவகிக்கும் அனைத்துக் கட்சிகளினதும் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக கையொப்பம் இட்டுள்ள கடிதமொன்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவ்ருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சட்டப்படி தேர்தலை நடத்துவதற்கு இருந்த ஒரேயொரு தடையை உயர் நீதிமன்றம் இப்போது நீக்கியுள்ளதால், எதிர்வரும் மார்ச் 19ஆம் திகதிக்கு முன்னதாக இந்த தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

எனினும், இது சம்பந்தமாக திறைசேரி செயலாளருடனோ, வேறு எவருடனுமோ நீங்கள் கலந்துரையாடத் தேவையில்லை என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை நாளை காலை 9 மணிக்கு தேர்தல்கள் செயலகத்தில் சந்திக்க விரும்புவதாகவும் எதிர்க்கட்சிகள் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளன. (4-7)

## 150 போதை...

நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கோப்பாய் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-7,104)

## சடுதியாக...

வீழ்ச்சி கண்டுள்ளது.

இதேவேளை சர்வதேச சந்தையிலும் தங்கத்தின் விலை வீழ்ச்சி கண்டுள்ளதை சர்வதேச செய்திகள் உறுதி செய்துள்ளன.

இதேபோல ரூபாயின் பெறுமதி அதிகரித்ததன் காரணமாக பொருட்கள் சேவைகளின் விலைகள் கணிசமாகக் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட அதிரடி மாற்றத்துக்கு வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகையும் புலம் பெயர் தமிழ் மக்களின் வருகையும் காரணம் எனக் குறிப்பிட்டுள்ள பொருளியல் அறிஞர்கள், இவர்களின் வருகை வெளிநாட்டு நாணயங்களை இலங்கைக்கு அள்ளிக் கொடுத்துள்ளதாகக் கருத்துரைத்துள்ளனர். (4-7)

## அமெ...

இலங்கைக்கு வருகை தந்தமை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திருகோணமலையில் இராணுவத் தளமொன்றை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளிற்காகவே சமீபத்தில் அமெரிக்காவின் உயர்மட்ட குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர் என தெரிவிக்கப்படுவதை தாம் நிராகரிப்பதாக இதன்போது வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இது ஒரு முழுமையான முட்டாள்த்தனம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

உலகின் மிகவும் ஈவிரக்கமற்ற பயங்கரவாத அமைப்பை தோற்கடிப்பதற்கு அமெரிக்காவின் புலனாய்வு தகவல்களே உதவின என்பது எங்களிற்கு தெரியும்.

எல்லைகளை கடந்து நாங்கள் எங்கள் சர்வதேச சகாக்களுடன் இணைந்து செயற்பட்டிருக்காவிட்டால் எங்களால் விடுதலைப் புலிகளை தோற்கடித்திருக்க முடியாது.

இவ்வாறான செயற்பாட்டின் மூலம் எங்களால் விடுதலைப் புலிகளின் ஆயுத விநியோகத்தை முடக்க முடிந்தது, அவர்களின் நிதி திரட்டும் நடவடிக்கைகளை முடக்கினோம். சர்வதேச அளவில் அவர்களை தடை செய்தோம்.

நீங்கள் சரியாக நினைவில் வைத்திருப்பீர்கள் என்றால் விடுதலைப் புலிகளின் 9 ஆயுதக் கப்பல்களை இலங்கை கடற்படை அழித்தது.

இது எங்களது புலனாய்வு பிரிவினர் அமெரிக்க புலனாய்வு பிரிவினருடன் ஒத்துழைத்ததன் காரணமாகவே சாத்தியமானது என குறிப்பிட்டுள்ளார். (4-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 05/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1505
வெற்றி இலக்கங்கள்
தனுசு 5 3 2 2 7 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.03.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1080
Q 10 35 45 49
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.03.05 சீட்டிழுப்பு இலக்கம் 3292
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
G 18 40 50 71
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 05/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1398
C 14 32 58 60 65

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.03.05
சீட்டிழுப்பு இலக்கம் 359
தனுசு 11 13 27 36 தனுசு
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/03/05
சீட்டிழுப்பு இலக்கம் 5050
N 6 5 0 9 9 9
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1851
வர்ணம்: இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2023.03.05
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,867,860/-
05 06 19 27 A
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 30 11 33 39 52
சீட்டிழுப்பு வாரம் 1201
வர்ணம் மஞ்சள்
2023.03.05 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 310,990,216.20
DLB
011-2 333 546-47
Web: www.dlb.lk

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2023-03-05
வெற்றி வாரம் 3737
வர்ணம் ஊதா
02 14 54 58
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,760,620/-

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 296
சீட்டிழுப்பு திகதி 2023.03.05
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 18 32
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,295,340/-
DLB


சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.03.05
சீட்டிழுப்பு இல: 4186
வர்ணம்: இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,539,460/-
04 07 69 71 U
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2025
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.05
தினம் ஞாயிற்றுக்கிழமை
A 07 15 32 75
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,192,460/-
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்காத நினைவுகளுடன்

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 . 04 . 1947

மறைவு 08 . 03 . 2020

அமரர்

## Lion - வைரமுத்து சுப்பிரமணியம்

(முன்னாள் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர் (k.k.s), முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் (வலி.கிழக்கு))

திதி : 06.03.2023

அன்பின் உருவமாய் பாசத்தின் இருப்பிடமாய்
அரவணைப்பில் சிகரமாய் என்றும் புன்னகைத்த முகத்துடன்
உற்றார் உறவினர்க்கு என்றும் உதவிக்கரம் நீட்டி
தன் குடும்பத்தினர் எல்லோரினதும் சீர் சிறப்பிற்கும் வழிகாட்டி
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
உங்கள் ஆத்மா என்றும் இறைவன் திருவடியில் இன்புற்றிருக்க
இறையருளை வேண்டி மலர்தூவி அஞ்சலிக்கின்றோம்

கோப்பாய் மத்தி,
கோப்பாய். (14773) குடும்பத்தினர்

# 70 அடி பள்ளத்தில் லொறி கவிழ்ந்து விபத்து

## 14 பேர் காயம்

நுவரெலியா, லபுக்கல பகுதியில் மரக்கறிகளை ஏற்றிச் சென்ற லொறி வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன் போது லொறியில் பயணித்த 14 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுசிகிச்சை பெற்று வருவதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்துக்கு மரக்கறிகளை ஏற்றிச்சென்ற லொறியொன்று வீதியை விட்டு விலகி சுமார் 70 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நுவரெலியா கம்பளை பிரதான வீதியில் நுவரெலியா, லபுக்கல தேயிலை தொழிற்சாலைக்கு அருகிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன் போது லொறியில் 15 பேர் பயணித்துள்ளதுடன், அவர்களில் காயமடைந்த 14 பேர் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் படுகாயமடைந்த 5 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (4,7)

# மரை இறைச்சியை எடுத்து வந்தவர் கைது

(அராலி)

சட்டவிரோதமாக மரை இறைச்சியை எடுத்து வந்தவர் ஊர்காவற்துறை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் 3 கிலோ மரை இறைச்சியை கிளிநொச்சியில் இருந்து எடுத்து வந்த வேளை ஊர்காவற்துறை பகுதியில் வைத்து இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஊர்காவற்துறை பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர் ஆவார். அவரை நேற்று ஊர்காவற்துறை நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய வேளை 50 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்வதற்கு நீதவான் உத்தரவிட்டார். (4,7,104)


**வாகனம் குத்தகைக்கு தேவை**

வான்கள், கார்கள் குத்தகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு :
**077 489 1279**
(14807)


**பணியாளர் தேவை**

நெல்லியடியில் இயங்கும் உணவகத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

1. சமையல் உதவியாளர்.
2. உணவு பரிமாறுபவர்.

தங்குமிடம் உணவு வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு :- **077 362 0979**
(C-6107)


# 15 ஆம் ஆண்டு நினைவு நாள்



தாயின் மடியில் 21-01-1957

தாயக மண்ணில் 06-03-2008

## மாமனிதர்

## கிட்டினன் சிவநேசன்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னாள் பொது முகாமையாளர் - வட மாகாண பனை, தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம்)

சிந்தனைப் பற்றுடையோன் தமிழினத்தின் விடிவிற்காய்
சிம்மகுரலதிலே பறைசாற்றியோன்
பார் எங்கும் சென்றும் நாடாளுமன்றமதிலே - இங்கு
நாடிவந்தோர் குறையதனை முறைசாரக் கேட்டவரே - உம்
நினைவுகளின் வடுக்கள் இங்கு நிழலாடுகின்றனவே
எம்மவர் மனங்களிலே...

இந்த நாளில் அன்னாருடன் சாவடைந்த சாரதி
பெரியண்ணன் மகேஸ்வரராசா அவர்களையும்
நினைவு கூருகின்றோம்

"யார்க்கரு", கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(C-6105)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.